# තේ ශක්ති අරමුදල
# தேயிலை சக்தி நிதியம
# TEA SHAKTHI FUND

## වාර්ෂික වාර්තාව
## வருடாந்த அறிக்கை
## *Annual Report*
## *2016*



වැවිලි කර්මාන්ත අමාත්‍යාංශය
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு
MINISTRY OF PLANTATION INDUSTRIES

# உள்ளடக்கம்


பக்கம்

1. அறிமுகம் 47-48

2. நோக்கு, செயற்பணி மற்றும் தேயிலை சக்தி நிதியத்தின் குறிக்கோள் 49

3. செயலாளரின் செய்தி 50-51

4. நிதி பகுப்பாய்வு 52

5. நிறுவன தகவல்கள் 53

6. பணிப்பாளர் சபை, கணக்காய்வு மற்றும் முகாமைத்துவம் குழு உறுப்பினர்கள் மற்றும் நிறைவேற்றுப் பதவியணி 54-55

7. நிறுவனத்தின் செயற்பாடுகள் பற்றிய சுருக்கம் 56-60

8. தேயிலை சக்தி கருத்திட்டங்கள் 61

9. தொழிற்பாடுகள் மற்றும் நிதி மீளாய்வு 62-66

10. வருமான விபரம் 67

11. ஐந்தொகை 68

12. மூலதன மாற்றல்கள் பற்றிய கூற்று 69

13. காசுப் பாய்ச்சல் கூற்று 70

14. கணக்கீட்டுக் கொள்கைகள் 71-86

15. கணக்கீட்டுக் குறிப்புக்கள் 87-93

16. கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை - 2016

# அறிமுகம்

தேயிலை சக்தி நிதியமானது சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் நலன்புரி மற்றும் பொருளாதார நிலையை மேம்படுத்தும் நோக்கத்துடன், 2000 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேயிலை சக்தி நிதிச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. சிறிய தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் முன்னேற்றத்திற்காக சமூகப் பாதுகாப்புத் திட்டம், விவசாய ஓய்வூதியம் மற்றும் ஒரு டிரெக்டர் திட்டம் ஆகியன ஆரம்பிக்கப்பட்டன. அதன் பின்னர் சிறிய தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு உயர் தரமிக்க உரங்களை வழங்கும் நோக்கில் உரத் திட்டமொன்றும் நிறுவப்பட்டது.

தேயிலை சக்தி நிதியத்தை ஆரம்பிப்பதற்கான அரசாங்கத்தின் பங்களிப்புத் தொகையாக 437.5 மில்லியன் ரூபாவும், 94,425 தேயிலை சக்தியின் அங்கத்தவர்களின் பங்குப் பணமாக அரசாங்க பங்களிப்பாகவும், 208.9 மில்லியன் ரூபாவும், தேயிலை சக்தி அங்கத்துவப் பணம் 133 மில்லியன் ரூபாவும் ஈடுபடுத்தப்பட்டன. அதன் பின்னர் இந்த முதலீட்டின் மூலம் தேயிலை சக்தி தொழிற்சாலைத் திட்டம், தேயிலை சக்தி உரத் திட்டம், உள்ளூர் தேயிலை விற்பனைத் திட்டம் என்பன ஆரம்பிக்கப்பட்டன.

ஆரம்பம் முதலே தேயிலை சக்தி நிதியமானது இலாபகரமான நிலையில் பேணப்பட்டு வந்த போதிலும் அதன் பின்னர் தேயிலை சக்தி நிதியத்தில் ஏற்பட்ட தொழிற்படு மூலதன நெருக்கடி காரணமாக மாண்புமிகு பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் அவர்களினால் 2016.06.21 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபன இலக்கம் 37/2016 இற்குக் கிடைக்கப் பெற்ற இலக்கம் அப/16/1224/726/015-1 மற்றும் 2016.07.05 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் தேயிலைச் சக்தி நிதியத்தின் பணிப்பாளர் சபை அதிகாரங்கள் இடைநிறுத்தப்பட்டு அதன் அதிகாரங்கள் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவ்வாறே அந்த அமைச்சரவையின் தீர்மானத்தின் அடிப்படையில், தேயிலை எரிசக்தி நிதியத்தின் கீழ் இருந்த 12 தொழிற்சாலைகளும், மாவரல வத்தை மற்றும் ஹொரனை அரமனாகொல்லையில் உள்ள உரக் களஞ்சியக் கட்டிடத்தை குத்தகை அடிப்படையில் அல்லது முகாமைத்துவத்தைக் கைமாற்றும் அடிப்படையில் வெளி தரப்பினர்களிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மீள்கட்டமைத்ததன் பின்னர் தொழிற்சாலைகளில் இருந்து குத்தகை தவணைப் பணம் மற்றும் நிர்வாகக் கட்டணங்கள் தேயிலை சக்தி நிதியத்திற்கு கிடைக்கப் பெறுவதுடன், எதிர்காலத்தில் குறுங்கால பொறுப்புகள் மற்றும் 135 மில்லியன் ரூபா பெறுமதியான நலன்புரி காப்பீட்டு நிதியம் என்பன கட்டியெழுப்பியதன் பின்னர் மீதமுள்ள தொகையினை திரண்ட நிதியத்திற்கு வைப்பிலிடுவதற்கு 2016 யூலை மாதம் 21 ஆம் திகதி சமர்ப்பிக்கட்ட அமைச்சரவை விஞ்ஞாபன இலக்கம் 38/2016 இற்கு 2016.08.17 திகதியிட்டு கிடைக்கப் பெற்ற அப/16/1427/726/015 II அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது.

தேயிலை சக்தி நிதியத்தின் பணிகள் தற்போது பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்காக தேயிலை சக்தி நிதியத்தில் பணிபுரிந்த குறைந்த எண்ணிக்கையிலான பணியாளர்கள் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சுடன் இணைக்கப்பட்டு தனியான அலகொன்றாக நிறுவப்பட்டுள்ளது.

மேற்படி 2016 யூலை மாதம் 21 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் தேயிலை சக்தி நிதியத்தில் பணியாற்றிய பணியாளர்களில் ஒரு பகுதியினரின் சேவையை முடிவுறுத்தி நட்டஈடு மற்றும் பணிக்கொடைக் கொடுப்பனவுகள் என்பன பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதுடன், அதற்காக 124 மில்லியன் ரூபா தொகை நிதி அமைச்சினால் பெற்றுத்தரப்பட்டுள்ளது. அதன் கீழ் தலைமை அலுவலகத்தின் 19 பணியாளர்கள், தொழிற்சாலை பதவியணியைச் சேர்ந்த 67 பணியாளர்கள் ஆகியோரது சேவையினை முடிவுறுத்தி தேயிலை சக்தி தொழிற்சாலைகளில் பணியாற்றிய 374 தொழிலாளர்களின் சேவையினை புதிய குத்தகை / முகாமைத்துவ பெறுகையாளரின் கீழ் தொடர்ந்தும் பெற்றுக்கொடுப்பதற்கு குத்தகை / முகாமைத்துவ ஒப்பந்தங்கள் மூலம் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே 2016.12.31 ஆம் திகதியன்று தொடர்ச்சியாக 05 வருட சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்த தொழிற்சாலை பணியாளர்களுக்கு குறித்த சேவைக் காலத்திற்குரிய பணிக்கொடைத் தொகையை அவர்களுக்கு விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

தலைமை அலுவலக ஊழியர்களில், ஐந்து ஊழியர்கள் இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்திற்கும், சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகார சபைக்கு நான்கு அலுவலர்களும், தென்னை பயிர்ச்செய்கை சபைக்கு ஒரு அலுவலரும், பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சுக்கு ஐந்து அலுவலர்களும், தேயிலை சக்தி நிதியத்திற்கு ஏழு அலுவலர்களும் என்ற அடிப்படையில் இணைப்புச் செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், தேயிலை சக்தி நிதியத்தின் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குதல் மற்றும் தேயிலை சக்தி தொழிற்சாலைகளினால் தரகர்களிடம் பெற்றுக்கொண்டுள்ள கடன்கள், கொள்வனவு செய்த பச்சை தளிர்களுக்கான கொடுப்பனவுகள் உள்ளிட்ட அனைத்து விதமான குறுகிய கால பொறுப்புகளையும் தீர்ப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன். அதற்காக பொது திறைசேரியினால் 167.87 மில்லியன் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது.

**நோக்கு**

சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் பொருளாதார மற்றும சமூக இருப்பை மேம்படுத்துவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட சிறந்த நிறுவனமாக மாறுதல்

.

**செயற்பணி**

தேயிலை சக்தி நிதியத்தின் உறுப்பினர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக வினைத்திறனாகவும் திறம்படவும் தேயிலை சக்தி நிதியை நிர்வகித்தல்.

**தேயிலை சக்தி நிதியத்தின் குறிக்கோள்கள்**

- சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் மனதில் சேமிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தி அவர்களின் பொருளாதார மற்றும் சமூக நிலையை உயர்த்துதல்.
- தேயிலை கைத்தொழில் தொடர்பாக தேவையான முதலீடுகளை விருத்தி செய்தல்.
- தேயிலை தொழிற்சாலைகளை கையகப்படுத்துதல், அபிவிருத்தி செய்தல் மற்றும் சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களின் பொருட்களை உற்பத்தி செய்வதற்குத் தேவையான ஏனைய வசதிகளை வழங்குதல்.
- அந்த தேயிலை தொழிற்சாலைகளின் தயாரிப்புகளை சந்தைப்படுத்துவதற்கான செயற்பாடுகளை மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்தல்.
- சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களாக தேயிலை உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களின் நலனோம்பலுக்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.
- பெருந்தோட்டத் கைத்தொழிலுக்குத் தேவையான உரங்களின் இறக்குமதி, உற்பத்தி மற்றும் விற்பனை.
- பலமிக்க சுயநிதி நிறுவனமொன்றாக பராமரித்தல்.
- இலாபமீட்டும் ஒரு நிறுவனமாக மாறுதல் மற்றும் 10% தேறிய இலாபமொன்றினை பேணிவரல்.
- 25% நிலைபேறான வளர்ச்சி ஒன்றினை அடைதல்.
- இடர்களை இனங்காணல் மற்றும் முறையான முகாமைத்துவம்.

## செயலாளரின் செய்தி

தேயிலை சக்தி நிதியம் 2000 ஆண்டின் 47 ஆம் இலக்க தேயிலை சக்தி நிதியச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ளதுடன், 2016 ஆம் ஆண்டிலே ஏற்பட்ட கடுமையான தொழிற்படு மூலதன நெருக்கடி காரணமாக பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரினால் 2016.06.21 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்குக் கிடைக்கப் பெற்ற இலக்கம் அப/16/1224/726/015-1 மற்றும் 2016.07.05 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் தேயிலை சக்தி நிதியத்தின் பணிப்பாளர் சபையின் அதிகாரங்களை இடைநிறுத்தி அந்த அதிகாரங்கள் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டது.

தேயிலை சக்தி நிதியத்தை மீள்கட்டமைத்ததன் பின்னர், அதன் செயற்பாடுகள் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சினால் மேற்கொள்ளப்படுவதுடன், அதற்காக தேயிலை சக்தி நிதியத்தில் பணியாற்றிய வரையறுக்கப்பட்ட பணியாளர்கள் தோட்டக் கைத்தொழில் அமைச்சுக்கு இணைக்கப்பட்டுள்ளனர்.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் நேரடி மேற்பார்வையின் கீழ் தேயிலை சக்தி நிதியத்தை கையகப்படுத்திய போது, தேயிலை சக்தி நிதியத்தினால் செலுத்த வேண்டியிருந்த நிலுவைத் தொகையான சுமார் 167 மில்லியன் ரூபா பெறுமதியான குறுகிய கால பொறுப்புக்கள் நிலவியதுடன், அவற்றிலே தொழிற்சாலைக்கு தளிர் கொள்வனவு செய்ததன் மூலம் தளிர் உரிமையாளர்களுக்குச் செலுத்த வேண்டிய நிலுவை முற்பணம், நிலுவை மின் பட்டியல், தொழிற்சாலை வழங்குநர்களுக்கு செலுத்த வேண்டியுள்ள நிலுவைத் தொகை, தொழிலாளர்களின் ஊதிய நிலுவை, ஊழியர்களின் ஊதிய நிலுவை, ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி மற்றும் நிலுவை பணிக்கொடை என்பன அடங்கும். அதன்படி, அமைச்சினால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்குக் கிடைக்கப் பெற்ற அங்கீகாரத்தின் பிரகாரம், குறித்தி நிலுவைத் தொகையினை பொதுத் திறைசேரியிலிருந்து பெற்றுக்கொண்டு மேற்படி பொறுப்புக்கள் தீர்க்கப்பட்டன.

அவ்வாறே 2016.06.21 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபன இலக்கம் 37/2016 இற்குக் கிடைக்கப் பெற்ற இலக்கம் அப/16/1224/726/015-1 மற்றும் 2016.07.05 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் தேயிலைச் சக்தி நிதியத்தின் கீழ் இருந்த 12 தொழிற்சாலைகளும், மாவரல வத்தை மற்றும் ஹொரனை அரமனாகொல்லையில் உள்ள உரக் களஞ்சியக் கட்டிடத்தை குத்தகை அடிப்படையில் அல்லது முகாமைத்துவத்தைக் கைமாற்றும் அடிப்படையில் வெளி தரப்பினர்களிடம் ஒப்படைப்பதற்கு அனுமதி கிடைக்கப்பெறவில்லை. அதன்படி, பெறுகை முறைமை பின்பற்றி தெனியாய, கிலிமலே மற்றும் தெரனியகலை தேயிலை சக்தி தொழிற்சாலைகள் 2016 ஆம் ஆண்டிலே வெளி தரப்பினருக்கு குத்தகை / முகாமைத்துவத்தை கைமாற்றுவதற்குத் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மரபு ரீதியான பெருந்தோட்டத் துறையை மிக வேகமாகப் பின்தள்ளி, தேயிலைத் துறையில் தமது அடையாளத்தை நிலைநிறுத்திய சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள். நாட்டின் வறுமைக் குறைப்புக்கும் மற்றும் தேசியப் பொருளாதாரத்தில் தமது பங்களிப்பை உணர்ந்து அவர்களை ஒழுங்கமைக்கப்பட்ட நிலைக்கு கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்ட தேயிலை சக்தி நிதிய எண்ணக்கருவானது எந்தளவு காலத்திற்குப் பொருத்தமான மற்றும் அர்த்தமுள்ள ஒரு வேலைத்திட்டமாக அமைந்த போதிலும் காலப் போக்கில் அதன் நிர்வாகத்தில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக எதிர்பாத்த நோக்கங்களை அடைய முடியாது போனதால், அமைச்சரவையின் அனுமதியுடன் பொருத்தமானவாறு முகாமைத்துவ தீர்மானங்களை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுத.

**பி.எல்.ஏ.ஜே. தர்மகீர்த்தி**
செயலாளர்
விவசாயம் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

## நிதிப் பகுப்பாய்வு

## 2016 திசெம்பர் 31 ஆம் திகதி வரை

## நிதி செயலாற்றுகையின் சுருக்கம்

| | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|
| | மி.ரூபா | மி.ரூபா | மி.ரூபா |
| வருமானம் | 621.59 | 573.52 | 100.63 |
| விற்பனைச் செலவு | (611.32) | (552.52) | (147.06) |
| மொத்த இலாபம் | 10.27 | 21.00 | ( 46.42) |
| பிற வருமானம் | 44.08 | 43.84 | 152.34 |
| விற்பனை விநியோகச் செலவு | (15.51) | (14.93) | 00 |
| நிலைய நிருவாகச் செலவு | (200.33) | (188.38) | (178.44) |
| அரச அன்பளிப்புகளை பதிவளித்தல் | 43.75 | 119.30 | 43.75 |
| தேறிய நிதிச் செலவுகள் | (10.08) | (20.07) | (1.75) |
| தேறிய இலாபம் / நட்டம் | (127.82) | (39.23) | (30.53) |
| பங்கிலாபம் | இல்லை | இல்லை | இல்லை |
| மொத்த சொத்துக்கள் | 758.47 | 696.79 | 643.64 |
| தொழிற்புடு மூலதனம் | 63.39 | 19.11 | (1.08) |
| நடமாடும் மூலதனம் | 1:1.9 | 1:0.98 | 1:0:.98 |

2014, 2015 மற்றும் 2016 மீதிகள் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களின் பிரகாரம் சீராக்கம் செய்ததன் பின்னர் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

# கூட்டிணைக்கப்பட்ட தகவல்கள்

பெயர் : தேயிலை சக்தி நிதியம்

முகவரி : 553 A, மாதிவெல வீதி, தலவத்துகொட
(2016 பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி வரை)

தொலைபேசி : 011-7421121

தொலைநகல் : 011-22796537, 011-7421122

முகவரி : சிறிய தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபை,
இலக்கம் 70, பாராளுமன்ற வீதி,
பெலவத்த, பத்தரமுல்லை. (2016 செப்தெம்பர் வரை)

தொலைபேசி : 011-7909020

தொலைநகல் : 011-2784925

முகவரி : பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு, தேயிலை சக்தி நிதியம்,
10 ஆம் மாடி, செத்சிறிபாய 2ஆம் கட்டம், பத்தரமுல்லை.

தொலைபேசி : 011-2186207

தொலைநகல் : 011-2186202

E-mail : tsf@teashakthi.gov.lk

கூட்டிணைத்தல் சட்டம் : 2000 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேயிலை சக்தி நிதியச் சட்டம்

கூட்டிணைத்தல் ஆண்டு: 2000

தொழில் முயற்சியின் தன்மை

* தேயிலை ஆணையாளர் ஒழுங்கு விதிகளின் கீழ் தேயிலை தளிர்களை கொள்வனவு செய்யும் அடிப்படையின் மீது சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களிடம் பச்சை தேயிலை தளிர்களை கொள்வனவு செய்து உற்பத்தி செய்யும் மற்றும் சட்ட ரீதியாக அங்கீகாரம் பெற்ற வழிகளின் ஊடாக தேயிலை விற்பனை செய்தல்.
* தேயிலை பயிர் செய்கையாளர்களுக்கு விசேடமாக சிறிய தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்குமிகவும் சிறிய இலாபம் ஒன்றினை வைத்துக்கொண்டு சிபாரிசு செய்யப்பட்ட பொறிமுறை ஒன்றின் பிரகாரம் உர வகைகளை கலவை செய்து விற்பனை செய்தல்.
* வாடிக்கையாளர்களுக்கு உள்ளூர் சந்தையில் தேயிலை கலவைகளை விநியோகித்தல்.

கணக்காய்வாளர்கள் : அரச கணக்காய்வாளர் திணைக்களம்

வங்கியாளர் : இலங்கை வங்கி

## பணிப்பாளர் சபை, கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உறுப்பினர்கள் மற்றும் நிறைவேற்று பதவியணி

**<u>பணிப்பாளர் சபை</u>**

01. திரு. விஜேரத்ன வெதகெதர - பணிப்பாளர்/தலவர், சிறு தேயிலை தோட்ட பிவிருத்தி அதிகார சபை
02. திரு. தயா அருவிப்பொல - பிரதம நிறைவேற்று அதிகாரி (2016 பெப்ரவரி 02 வரை)
03. திரு. நெவில் ரத்நாயக்க - பிரதம நிறைவேற்று அதிகாரி (2016 பெப்ரவரி 02 இன் பின்)
04. திரு. டீ.பீ. விமலசேன - பிரதம கணக்காளர்/திறைசேரி பணிப்பாளர்
05. திரு. எஸ்.ஆர்.எஸ். டி சில்வா - பொது முகாமையாளர், சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகார சபை
06. திரு. ஏ.டப்.எச்.ஐ.சீ. வீரகோன் - மேலதிகச் செயலாளர், பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு
07. திரு. எம்.பி. சிரில் - பணிப்பபாளர்/ பொது முகாமையாளர், சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகார சபை
08. திரு. நெவில் ரத்நாயக்க - பணிப்பபாளர்/ தலைவர், அகில இலங்கை சிறு தேயிலை தோட்ட சங்கங்கள் அமைப்பு/ பிரதம நிறைவேற்று அலுவலர், தேயிலை சக்தி நிதியம்
09. திரு. ஜே.எம்.பி.ஜே. பண்டார - பணிப்பபாளர்/ தலைவர், இரத்தினபுரி சிறு தேயிலை தோட்ட பிராந்திய சங்கங்கள் அமைப்பு
10. திரு. டப்.ஆர்.எஸ். கருணாரத்ன - பணிப்பபாளர்/ தலைவர், நுவரெலியா சிறு தேயிலை தோட்ட பிராந்திய சங்கங்கள் அமைப்பு
11. திரு. ஆர். எம். குணசேன - பணிப்பபாளர்/ தலைவர், பதுளை சிறு தேயிலை தோட்ட பிராந்திய சங்கங்கள் அமைப்பு
12. திரு. பி.ஜீ. அபேசிங்க - பணிப்பபாளர்/ தலைவர், கண்டி சிறு தேயிலை தோட்ட பிராந்திய சங்கங்கள் அமைப்பு
13. திரு. பீ.எச். சுசந்த டி சில்வா - பணிப்பபாளர்/ தலைவர், காலி சிறு தேயிலைதோட்ட பிராந்திய சங்கங்கள் அமைப்பு
14. திரு. கே.எல். குணரத்ன - பணிப்பபாளர்/ தலைவர், களுத்துறை சிறு தேயிலை தோட்ட பிராந்திய சங்கங்கள் அமைப்பு
15. திரு. பீ.ஆர்.ஏ. ரத்நாயக்க - பணிப்பபாளர்/ தலைவர், கேகாலை சிறு தேயிலை தோட்ட பிராந்திய சங்கங்கள் அமைப்பு

இந்த பணிப்பாளர் சபை 2016.07.07 ஆம் திகதி வரையில் இயங்கியது. கௌரவ பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் அவர்களினால் 2016.06.21 ஆம் திகதியன்று சமர்ப்பித்த அமைச்சரவை விஞ்ஞாபன இலக்கம் 37/2016 இற்கு கிடைக்கப் பெற்ற இலக்கம் அப/16/1224/726/015-1 மற்றும் 2016.07.05 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் பணிப்பாளர் சபை கலைக்கப்பட்டு அதன் அதிகாரம் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டது.

## கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

01.திரு. எம்.எஸ்.எச். மொஹொட்டி - தலைவர், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

02.திரு. ஆர்.யூ.பீ.ஆர். சிறிவர்தன - அழைப்பாளர், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

03.திரு. ஏ.எம்.பீ.எம்.பி. அத்தபத்து - உறுப்பினர், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

04.திரு. நெவில் ரத்நாயக்க - உறுப்பினர், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

05.திரு. ஜே.எம்.பி.ஜே. பண்டார - உறுப்பினர், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

06.திரு. ஈ.ஏ.பீ. ஆனந்த - உறுப்பினர், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

## நிறைவேற்று அதிகாரிகள்

01. திரு. தயா அவிருப்பொல - பிரதம நிறைவேற்று அதிகாரி (2016 பெப்ரவரி மாதம் வரை)

02. திரு. நெவில் ரத்நாயக்க - பிரதம நிறைவேற்று அதிகாரி (2016 பெப்ரவரி மாதம் முதல் 2016 திசெம்பர் மாதம் வரை

03. திரு. பீ.ஜீ.ஆர். திஸ்ஸ - பிரதம கணக்காளர்

04. திரு. எம்.எஸ்.எச். மொஹொட்டி - உள்ளகக் கணக்காய்வாளர்

05. திரு. ஆர்.யூ.பீ.ஆர். சிறிவர்தன - முகாமையாளர் (மனிதவளம் மற்றும் நிருவாகம்)

06. திரு. நிஹால் வீரசேகர - முகாமையாளர் (உரம் மற்றும் உள்ளூர் தேயிலை விற்பனை)

07. திரு. டப்.ஏ.ஏ.எஸ். ஜயசுந்தர - கணக்காளர்

08. திரு. சமில ஜயவிக்ரம - உள்ளகக் கணக்காய்வு அலுவலர்

09. திரு. ஏ.எச்.சீ.கெ. கருணாரத்ன - கணினி முறைமை நிருவாகி

10. திரு. எம்.ஏ. இந்திகரத்ன - நலன்புரி அலுவலர்

## நிறுவனத்தின் செயற்பாடுகள் பற்றிய சுருக்கம்

தேயிலைச் சக்தி நிதியத்தில் ஏற்பட்ட நிதி நெருக்கடி காரணமாக நிதியத்தை மீள்கட்டமைப்புச் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது. அதன் பிரகாரம், 2016 யூன் மாதம் 21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபன இலக்கம் 37/2016 இற்குக் கிடைக்கப் பெற்ற இலக்கம் அவி/16/1224/726/015-1 மற்றும் 2016.07.05 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் தேயிலை சக்தி நிதியம் மீள்கட்டமைப்புச் செய்யப்பட்டது.

### அடிப்படை செயற்பாடுகள்

கீழ் குறிப்பிட்டுள்ள கருத்திட்டங்கள் தேயிலை சக்தி நிதியத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட, அந்தக் கருத்திட்டங்களின் தொழிற்பாடு பற்றி முறையே பக்க இலக்கம் 16, 17, 18 மற்றும் 19 களில் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ள.

01. ஆலைக் கருத்திட்டம்
02. உரக் கருத்திட்டம்
03. உள்ளூர் தேயிலை சந்தைப்படுத்தல் திட்டம
04. தேயிலை சக்தி சமூக மற்றும் நலன்புரி பாதுகாப்புத் திட்டம்

### தொழிற்பாட்டு வருமானம்

மீளாய்வு ஆண்டிலே ஆலை கருத்திட்டம், உள்ளூர் தேயிலை சந்தைப்படுத்தல் கருத்திட்டம் மற்றும் உரத் திட்டம் நட்டமீட்டும் நிலையினை அடைந்துள்ளது. இது பற்றி இறுதிக் கணக்கு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், மேற்படி கருத்திட்டங்கள் மூலம் 1,2 மற்றும் 3 என குறிப்பிட்ட கருத்திட்டங்கள் 2016 ஆம் ஆண்டின் யூலை மாதத்தின் பின்னர் இயங்கவில்லை.

# இலாபம் மற்றும் ஒதுக்கீடுகள்

2015 மற்றும் 2016 இற்கான புரள்வின் தொழிற்பாட்டின் இலாபங்களின் தகவல்கள் பின்வருமாறு.

| | 2016 ^ரூபா& | 2015 ^^ரூபா& |
|---|---|---|
| தரகு விற்பனைகள் மூலம் பெற்ற வருமானம் | 95,469,667 | 525,348,607.00 |
| உள்ளூர் தேயிலை விற்பனை | 2,870,003 | 28,146,840.00 |
| உரம் விற்பனை | 573,000 | 14,872,520.00 |
| மூலப்பொருள் வருமானம் | - | 2,357.00 |
| கழிவு தேயிலை வருமானம் | 1,727,187 | 5,426,424.00 |
| விற்பனைக் கழிவு | - | (277,485.00) |
| மொத்த வருமானம் | **100,639,857.00** | **573,519,262.00** |
| விற்பனைச் செலவு | (147,060,681.00) | (552,517,570.00) |
| **மொத்த இலாபம்** | **(46,420,824.00)** | **21,001,692.00** |
| பிற வருமானங்கள் | 152,340,999.00 | 43,844,841.00 |
| நிருவாகச் செலவு | (178,445,015.00) | (188,377,711.00) |
| விற்பனை மற்றும் விநியோகச் செலவுகள் | - | (14,928,507.00) |
| **மொத்த தொழிற்பாட்டு வருமானம்** | (72,524,840.00) | (138,459,686.00) |
| நிதிச் செலவு | (1,755,101.00) | (20,073,109.00) |
| அரச நன்கொடைகள் பதிவழித்தல் | 43,750,503 | 119,300,503 |
| **வரிக்கு முன் தொழிற்பாட்டு வருமானம்** | **(30,529,438.00)** | **(39,232,291.00)** |
| வரி வருமானம் | – | – |
| தேறிய இலாபம் / நட்டம் | **(30,529,438.00)** | **(39,232,291.00)** |

**பங்கிலாபம் மற்றும் கையிருப்பு**

மீளாய்வு ஆண்டினுள் பங்கிலாபம் செலுத்துவதற்கு இலாபமொன்று இல்லாமையால், பங்கிலாபக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படவில்லை.

**கூட்டிணைக்கப்பட்ட வருமானங்கள்**

2016 ஆம் ஆண்டினுள் ரூ.150,000,000.00 பெறுமதியான தொகை திறைசேரி நிதி ஏற்பாடுகளாகக் கிடைக்கப் பெற்றுள்ளன.

**மூலதனச் செலவுகள்**

தேயிலை சக்தி நிதியத்தின் ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் பற்றிய விபரம் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 20 மூலம் காட்டப்பட்டுள்ளன.

**பங்களிப்பு மூலதனம்**

| | |
|---|---|
| அரசாங்கக் கொடுப்பனவுகள் | ரூ.**150,000,000.00** |
| பங்கு மூலதனம் | ரூ.**206,014,150.00** |

**குத்தகை ஒப்பந்தங்கள்**

2016 ஆம் ஆண்டிலே பின்வரும் தொழிற்சாலை குத்தகைகள்.. முகாமைத்துவ கொள்வனவாளர்களுக்கு வழங்குதல் தொடர்பான ஒப்பந்தங்களில் கைச்சாத்திடப்பட்டன.

- ரைகம்கோரலை தேயிலை சக்தி தொழிற்சாலை பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் மீது 2026.06.10 ஆம் திகதியன்று திக்ஹேன சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்திச் சங்கத்திடம் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது.

தேயிலை சக்தி நிதியத்தை மீள்கட்டமைப்புச் செய்வதற்காக 2016 யூலை மாதம் 21 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபன இலக்கம் 37/2016 இற்குக் கிடைக்கப் பெற்ற இலக்கம் அவி/16/1224/726/015-1 மற்றும் 2016.07.05 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் தொழிற்சாலைகளை குத்தகையில் வழங்குவதற்கு முன்மொழிவுகளைக் கோரி குத்தகை மற்றும் முகாமைத்துவ பெறுகையாளர்களை தேர்ந்தெடுத்து குத்தகை மற்றும் முகாமைத்துவ வழங்கலுக்கு நடவடிக்கை எடுகக்ப்பட்டது.

- தெரனியகல தொழிற்சாலை - 2016.12.28 ஆம் திகதியன்று இரத்தினபுரி பிளான்டேஷன் (தனியார்) கம்பனிக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது.
- கிலீமலை தொழிற்சாலை - 2016.11.24 ஆம் திகதியன்று கே.டீ. அசங்கா பிரியதர்ஷனீ குருப்பு இடம் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது.
- தெனியாய தொழிற்சாலை - 2016.11.17 ஆம் திகதியன்று அஜித் லசந்த குணவர்தன இடம் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது.

**உரிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்குதல்**

நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்க வேண்டியுள்ள திரவ ரீதியான நிதிச் சீராக்கங்களுக்கு வழியமைக்கின்ற அல்லது தேயிலை சக்தி நிதியம் அல்லது அதன் அதிகார எல்லையினுள் உள்ள சட்டங்கள் அல்லது ஒழுங்குமுறைகளை மீறும் ஏதேனுமொரு செயற்பாடு அல்லது அவ்வாறான சூழ்நிலை ஏற்படவில்லை என்பதை நாங்கள் உறுதியாக குறிப்பிடுகின்றோம்.

**பணிப்பாளர் சபை**

தேயிலை சக்தி நிதியத்தின் இயக்குநர்கள் குழு பக்க இலக்கம் 9 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. தேயிலை எரிசக்தி நிதியத்தின் பணிப்பாளர் சபை 2016 ஜூலை 07 ஆம் திகதி வரை செயற்பட்டதுடன், 2016 ஜூன் 21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தின் தீர்மானத்தின்படி பணிப்பாளர் சபை கலைக்கப்பட்டு அதன் அதிகாரம் தோட்ட அமைச்சின் செயலாளரிடம் வழங்கப்பட்டது.

**ஒப்பந்தங்கள் மற்றும் உத்தேச ஒப்பந்தங்கள் தொடர்பில் பணிப்பாளர் சபையின் தொடர்பு**

எந்தவொரு இயக்குநரும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ 2016 ஜூலை மாதம் 07 ஆம் திகதியன்று பணிப்பாளர் சபை கலைக்கப்படும் வரையிலான காலப் பகுதியினுள் எந்தவொரு ஒப்பந்தம் அல்லது உத்தேச ஒப்பந்தம் தொடர்பாக எந்தவொரு பொறுப்பினையும் கொண்டிருத்தலாகாது.

பணிப்பாளர்களினால் அவர்களுக்கு யாதேனுமொரு உறவு அல்லது சிறப்புத் தன்மையுடைய விடயங்கள் தொடர்பாக வாக்களிக்க வேண்டிய சந்தர்ப்பங்களில், குறித்த விடயத்திற்கு முன்னர் தமது உறவு அல்லது முக்கியத்துவம் பற்றி பணிப்பாளர் சபையின் ஏனைய பணிப்பாளர்களிடம் அறிவிப்பதற்கும் மற்றும் வாக்களிப்பதில் இருந்து விலகி இருப்பதற்கும் சம்பந்தப்பட்ட பணிப்பாளர் சபையின் உறுப்பினர் பொறுப்பாக இருப்பார்.

**சுற்றாடல் பாதுகாப்பு**

தேயிலை சக்தி நிதியத்தின் அனைத்து வணிக நடவடிக்கைகளும் சுற்றுச்சூழலை எந்த வகையிலும் பாதிக்காது. தேயிலை சக்தி நிதியத்தின் கொள்கையாக அமைவது, சுற்றுச்சூழலுக்கு பாதிப்பைக் குறைப்பதும், உரிய அதிகாரிகளுடன் உறவினைப் மேம்படுத்துவதும் மற்றும் சம்பந்தப்பட்ட விதிமுறைகளுக்கு அமைய செயற்படுவதுமாகும்.

**நடவடிக்கைகள்**

ஐந்தொகை தயாரிக்கப்படும் தினத்தன்று இடம்பெற்று வந்த சம்பவங்கள் இருக்கவில்லை என்பதுடன், எனவே மீளத் தயாரித்தல் அல்லது நிதிக் கூற்றுக்களின் தெளிவுபடுத்தலொன்று தேவைப்படவில்லை.

**தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு**

தேயிலை சக்தி நிதியமானது எதிர்காலத்தில் இருக்கும் என்ற அனுமானத்தின் அடிப்படையில் நிதி அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், இந்த எண்ணக்கருவைப் பயன்படுத்தி, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை நடைமுறை மற்றும் நடைமுறை அல்லாதவை என வகைப்படுத்தப்பட்டு நிதி அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**<u>அனைத்து பங்குதாரர்களுக்கும் அனைத்து உரிமைகோரல்களுக்கும் நியாயமான பரிசீலனை</u>**

எமது பங்குதாரர்களின் அனுசரணையினைப் பாராட்டும் அதே நேரம் அனைத்து பங்குதாரர்களுக்கும் நியாயமான அக்கறையினை வழங்குவதற்கு தேயிலை சக்தி நிதியத்தினால் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**<u>கணக்காய்வு அலுவலர்கள்</u>**

2016 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்குரிய தேயிலை சக்தி நிதியத்தின் நிதிக் கூற்றுக்களை கணக்காய்வு செய்தல் இலங்கை சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 154 ஆவது உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தி ன் 13(1) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் ஆலோசனையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டது.

## தேயிலை சக்தி தேயிலைத் தொழிற்சாலைகள்

**1. பதுளை மாவட்டம்**

- பஸ்ஸரை தேயிலை சக்தி தொழிற்சாலை

**2. நுவரெலியா மாவட்டம்**

- கெப்பெட்டிபொல தேயிலை சக்தி தொழிற்சாலை
- கொத்மலை தேயிலை சக்தி தொழிற்சாலை (மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையினால் குத்தகை அடிப்படையில்)
- மகாவலி தேயிலை சக்தி தொழிற்சாலை

**3. களுத்துறை மாவட்டம்**

- ரைகம்கோரலை தேயிலை சக்தி தொழிற்சாலை

**4. காலி மாவட்டம்**

- எல்பிட்டிய தேயிலை சக்தி தொழிற்சாலை
- வலஹன்தூவ தேயிலை சக்தி தொழிற்சாலை

**5. இரத்தினபுரி மாவட்டம்**

- கிலீமலை தேயிலை சக்தி தொழிற்சாலை
- பலங்கொடை தேயிலை சக்தி தொழிற்சாலை
- பொத்துப்பிட்டிய தேயிலை சக்தி தொழிற்சாலை

**6. மாத்தறை மாவட்டம்**

- தெனியாய தேயிலை சக்தி தொழிற்சாலை
- மாரவல தேயிலை சக்தி தொழிற்சாலை

**7. கேகாலை மாவட்டம்**

- தெரனியகலை தேயிலை சக்தி தொழிற்சாலை
- புலத்கொஹுபிட்டிய தேயிலை சக்தி தொழிற்சாலை (நிர்மாணம் பூர்த்தி செய்யப்படவில்லை)

**8. உரம் மற்றும் உள்ளூர் தேயிலை சந்தைப்படுத்தல் கருத்திட்டம்**

- உரப் பிரிவு மற்றும் உள்ளூர் தேயிலை சந்தைப்படுத்தல் பிரிவு
- கலவை செய்யும் தொழிற்சாலை அரமனகொல்ல, ஹொரனை

## நிதி மற்றும் தொழிற்பாட்டு மீளாய்வு

**தேயிலை சக்தி தொழிற்சாலை கருத்திட்டம்**

**9.2.1. கொலுந்து வழங்கல் மற்றும் முடிவுப் பொருள் தேயிலை உற்பத்தி**

**கொலுந்து இலை கொள்வனவு செய்தல் மற்றும் முடிவுப் பொருள் தேயிலையின் அளவு (கி.கி.) 2016**

| தொழிற்சாலை | கொள்வனவு செய்த கொலுந்தின் அளவு | உற்பத்தி செய்த தேயிலையின் அளவு | ஏனைய விடயங்கள |
|---|---|---|---|
| பலாங்கொடை | மூடப்பட்டுள்ளது. | | |
| தெனியாய | 10,993 | 2,317 | 2016 சனவரி மாதம் |
| எல்பிட்டி | 32,223 | 6,928 | 2016 |
| கெப்பெட்டிபொல | 18,962 | 4,077 | 2016 |
| கொத்மலை | உற்பத்திப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன | | |
| மகாவலி | 13,541 | 2,911.5 | 2016.04/05 |
| மாரவல | உற்பத்திப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன | | |
| பஸ்ஸர | 14,316 | 3,078 | 2016.04/05 |
| ரைகம்கோரலை | 263,624 | 52,818.75 | 2016 ஜூன் மாதம் வரையில் |
| வலஹுன்தூவ | 17,939 | 3,857 | 2016.02 |
| தெரனியகல | உற்பத்திப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன | | |

- தெரதியகல தொழிற்சாலை - 2016.12.28 ஆம் திகதியன்று இரத்தினபுரி பிளான்டேஷன் (தனியார்) கம்பனிக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது.
- கிலீமலை தொழிற்சாலை - 2016.11.24 ஆம் திகதியன்று கே.டீ. அசங்கா பிரியதர்ஷனீ குருப்புவிடம் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது.
- தெனியாய தொழிற்சாலை - 2016.11.17 ஆம் திகதியன்று அஜித் லசந்த குணவர்தனவிடம் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது.
- ரைகம்கோரலை தொழிற்சாலை - 2016.06.10 ஆம் திகதியன்று திக்ஹேன சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி சங்கத்திடம் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது.

தெனியாய தேயிலை சக்தி தொழிற்சாலையின் தேயிலை உற்பத்திப் பணிகள் 2016 ஜனவரி மாதத்திற்குப் பின்னர் மேற்கொள்ளப்படவில்லை. 2016 ஆம் ஆண்டில், தேயிலை சக்தி நிதியத்தின் தொழிற்சாலைகளால் முடிவுப் பொருள் தேயிலை 75,987 கிலோ கிராம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. தேயிலை சக்தி நிதியம் 2016 ஆம் ஆண்டிலே தேயிலை உற்பத்தி வருமானமாக 95.47 மில்லியன் ரூபா தொகையினை ஈட்டியுள்ளது.

## தேயிலை சக்தி உரக் கருத்திட்டம்

தேயிலை சக்தி உரக் கருத்திட்டம் ஹொரனை, அரமனகொல்ல பிரதேசத்தில் இயங்கி வருவதுடன், அங்கு தேயிலை, இறப்பர் மற்றும் கருவா ஆகிய பயிர்களுக்குத் தேவையான உரத்தினை உற்பத்தி செய்தல் மற்றும் சந்தைப்படுத்தல் என்பன இடம்பெற்றன. எனினும் தேயிலை சக்தி நிதியத்தில் 2016 ஆண்டு இடம்பெற்ற நிதி நெருக்கடி காரணமாக ஏற்பட்ட தொழிற்படு மூலதன தட்டுப்பாட்டினால் உர உற்பத்தியை மேற்கொள்வதற்குத் தேவையான அடிப்படை உரத்தினை கொள்வனவு செய்வதற்கு முடியாத ஒரு நிலை ஏற்பட்டதுடன், அதன் காரணமாக உரக் கருத்திட்டம் நஷ்டமடையும் நிலைக்கு உள்ளானது.

**உர வருமானம் - 2015 ,Ue;J 2016**

| தொகுதி | 2015 | 2016 |
|---|---|---|
| பெறுமதி (ரூ.) | 14,592,678 | 573,000 |

தேயிலை சக்தி நிதியத்தினுள் செயற்பட்ட உரக் கருத்திட்டம் 2016 யூன் மாதம் 21 ஆம் திகதி சமா்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபன இலக்கம் 37/2016 இற்குக் கிடைக்கப் பெற்ற இலக்கம் அப/16/1224/726/015-1 மற்றும் 2016.07.05 ஆம் திகதியன்று கிடைக்கப் பெற்ற அமைச்சரவைத் தீா்மானத்தின் பிரகாரம் மூடிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## தேயிலை சக்தி உள்ளூர் தேயிலை சந்தைப்படுத்தல் பிரிவு

**உள்ளூர் தேயிலை சந்தைப்படுத்தல் வருமானம் 2015 ,Ue;J 2016 ஆம் ஆண்டு வரை**

| தொகுதி | 2015 | 2016 |
|---|---|---|
| உள்ளூர் தேயிலை சந்தைப்படுத்தல் (ரூ.) | 2,830,159 | 2,848,418 |

தேயிலை சக்தி நிதியத்தினுள் செயற்பட்ட உள்ளூர் தேயிலை சந்தைப்படுத்தல் கருத்திட்டம் 2016 யூன் மாதம் 21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபன இலக்கம் 37/2016 இற்குக் கிடைக்கப் பெற்ற இலக்கம் அப/16/1224/726/015-1 மற்றும் 2016.07.05 ஆம் திகதியன்று கிடைக்கப் பெற்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் மூடிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## தேயிலை சக்தி சமூக மற்றும் நலன்புரி பாதுகாப்புத் திட்டம்

இந்த நலன்புரி காப்பீட்டு நிதியானது சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களுக்குள்ள ஒரேயொரு நலத்திட்டமாகும். ஒரு உறுப்பினர் ஆயுட்கால உறுப்புரிமையினைப் பெற்றுக்கொள்வதற்காக ரூ.2,400 தொகையினைச் செலுத்த வேண்டும். இந்தப் பிரிவானது தேயிலை சக்தி நிதியத்தின் கீழுள்ள ஒரு முக்கியமான பிரிவாகக் குறிப்பிடலாம்.

**நலன்புரி திட்டத்தின் முன்னேற்றம் - 2014 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை**

| ஆண்டு | செலுத்தி பயனாளிகளின் எண்ணிக்கை | பயன்பெற்ற தொகையின் பெறுமதி ரூ. |
|---|---|---|
| 2014 | 505 | 9,471,548.00 |
| 2015 | 537 | 10,014,315.79 |
| 2016 | 633 | 12,202,796.00 |

2014 ஆம் ஆண்டு முதல தேயிலை சக்தி சமூக நலன்புரி காப்பீட்டுத் திட்டத்திற்கு புதிய அங்கத்தவர்களை சேர்த்துக்கொள்ளவில்லை எனினும் 2016 ஆம் ஆண்டிலே 633 பயனாளிகளுக்கு ரூ. 12,202,796.00 பெறுமதியான தொகை செலுத்தப்பட்டுள்ளது.

## பங்குதாரர்கள் / சம பங்குகள்

(ரூ.)

1. இலங்கை அரசாங்கம் (ஆரம்ப மூலதனம்) **437,505,030.22**

11. சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்கள்

அ. பங்குதாரர்களின் பங்களிப்பு (பங்காளர்கள்) **206,014,150.00**

ஆ. தேயிலை சக்தி அங்கத்தவர்களின் பங்களிப்பு **135,243,850.00**

**பங்கு ஒன்றின் அடிப்படை வருமானம் 2012 ஆம் ஆண்டும் முதல் 2016 ஆம் ஆண்டு வரையில்**

| ஆண்டு | ஒரு பங்குக்கான ஆரம்ப வருவாய் (ரூ.) |
|---|---|
| 2012 | 3.93 |
| 2013 | (2.88) |
| 2014 | (6.20) |
| 2015 | (1.90) |
| 2016 | (1.48) |

**தேயிலை சக்தி பங்கு வழங்கல் பற்றிய விபரம்**

| கொள்வனவு செய்த பங்குகளின் எண்ணிக்கை | கொள்வனவு செய்த பங்குதாரர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1 - 24 | 19,781 |
| 25 - 50 | 18,342 |
| 51 - 100 | 19,876 |
| 101 - 200 | 16,883 |
| 201 - 300 | 6,007 |
| 301 - 400 | 1,243 |
| 401 - 500 | 3,784 |
| 501 - 1,000 | 4,985 |
| 1001 - 2,000 | 1,835 |
| 2001 - 3,000 | 775 |
| 3,001 - 4,000 | 101 |
| 4,001 - 5,000 | 476 |
| 5,001 - 10,000 | 333 |
| 10,001 < | 4 |
| **மொத்தம்** | **94,425** |

2002 மே ஆண்டிலே தேயிலை சக்தி பங்கு வழங்கல் ஆரம்பிக்கப்பட்டதுடன், அதனூடாக ரூ. 10/=பெறுமதியான பங்குகள் வழங்கப்பட்டன. 20,900,000 பங்குகள் தேயிலை சக்தி அங்கத்தவர்கள் 94,425 பேரிடையே வழங்கி ரூ.209,000,000/- பெறுமதியான தொகையினை உழைத்து அத்தொகையினை தேயிலை சக்தி நிதியத்தை நிறுவுவதற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

# தேயிலை சக்தி நிதியம்

**2016 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்குரிய விரிவான வருமானக் கூற்று**

| | குறிப்பு | 2016 | 2015 |
|---|---|---|---|
| வருமானம் | 6 | 100,639,857 | 573,519,262 |
| விற்பனைச் செலவு | | (147,060,681) | (552,517,570) |
| **மொத்த இலாபம்** | | **(46,420,824)** | **21,001,692** |
| | | | |
| பிற வருமானம் | 7 | 152,340,999 | 43,844,841 |
| விற்பனை விநியோகச் செலவுகள் | | - | (14,928,507) |
| நிருவாகச் செலவுகள் | | (178,445,015) | (188,377,711) |
| **தொழிற்படு இலாபம் /(நட்டம்)** | | **(72,524,840)** | **(138,459,685)** |
| | | | |
| வட்டி வருமானம் | 8 | 588,508 | 394,909 |
| வட்டிச் செலவினம் | 8 | (2,343,609) | (20,468,018) |
| அரசாங்க கொடைகளை பதிவழித்தல் மீளப்பெறல் | | 43,750,503 | 119,300,503 |
| **வரிக்கு முன் இலாபம் /(நட்டம்)** | | **(30,529,438)** | **(39,232,291)** |
| வருமான வரிச் செலவினம் | | - | - |
| **ஆண்டிற்குரிய இலாபம் /(நட்டம்)** | | **(30,529,438)** | **(39,232,291)** |
| | | | |
| பங்கு ஒன்றின் ஆரம்ப ஈட்டல்/(நட்டம்) (ரூ.) 11 | 11 | (1.48) | (1.90) |
| **ஆண்டிற்குரிய இலாபம் /(நட்டம்)** | | **(30,529,438)** | **(39,232,291)** |
| பிற விரிவான வருமானம் | | - | - |
| **பிற விரிவான வருமானம;/(நட்டம்)** | | **(30,529,438)** | **(39,232,291)** |

**05 முதல் 25 வரையிலான பக்கங்களில் வருகின்ற கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான குறிப்புக்கள் இந்த நிதி கூற்றுக்களின் அத்தியாவசிய பகுதியொன்றாகும்**

# தேயிலை சக்தி நிதியம்

## 2016 திசெம்பர் 31 இல் நிதி நிலை பற்றிய கூற்று

| | குறிப்பு | 2016 | 2015 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | |
| ஆதனங்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் | 12 | 272,543,007 | 285,261,613 |
| அருவச் சொத்துக்கள் - கணினி மென்பொருள் | 13 | 2,600,000 | 2,600,000 |
| மூலதீட்டுச் சொத்துக்கள் | 14 | 31,709,123 | 33,433,585 |
| முதிர்ந்த / முதிர்ச்சியடையாத பயிர் செய்கை | 15 | 13,932,571 | 14,158,054 |
| நிலையான வைப்புக்களில் முதலீடு | | - | 14,879,240 |
| **மொத்த நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | **320,784,701** | **350,332,492** |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | |
| பொருள் யைிருப்பு | 17 | 4,387,922 | 69,590,593 |
| வர்த்தக மற்றும் பிற கிடைக்க வேண்டியவை | 18 | 271,543,470 | 270,897,621 |
| நியதிச்சட்ட கிடைக்க வேண்டியவை | 19 | 2,790,822 | 2,790,822 |
| பணமும் பணத்திற்குச் சமமானவையும் | 20 | 44,134,539 | 3,181,092 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **322,856,753** | **346,460,128** |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **643,641,454** | **696,792,620** |
| **உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள்** | | | |
| **உரிமையாண்மை** | | | |
| வழங்கிய மூலதனம் | 21 | 206,014,150 | 206,014,150 |
| உண்மை இருப்பு | 21 | 50,249,773 | 50,249,773 |
| நிறுத்தி வைத்த உழைப்பு (பற்று) | 21 | (398,528,527) | (367,912,464) |
| **மொத்த உரிமையாண்மை** | | **(142,264,604)** | **(111,648,541)** |
| **நடைமுறையல்லா பொறுப்புக்கள்** | | | |
| அங்கத்துவ பங்களிப்புத் தொகை நிதியம் | 22 | 135,243,850 | 135,221,950 |
| அரசாங்க கொடைகள் | 23 | 218,752,515 | 262,503,018 |
| வ/ப கலுபோவிட்டியான தேயிலை ஆலை கம்பனி (குத்தகை முற்பணம்) | 24 | 48,833,264 | 48,833,264 |
| வட்டிக்கான கடன்பெறல் (நடைமுறையல்லா பகுதி) | 25 | | 6,008,533 |
| ஓய்வூதிய நன்மை பொறுப்புக்கள் | 26 | 59,135,276 | 28,521,886 |
| **மொத்த நடைமுறையல்லா பொறுப்புக்கள்** | | **461,964,905** | **481,088,651** |
| **நடைமுறை பொறுப்புக்கள்** | | | |
| வர்த்தக மற்றும் பிற கொடுக்க வேண்டியவை | 27 | 318,946,968 | 309,758,086 |
| சட்டவாக்கக் கொடுக்க வேண்டியவை | 28 | 4,545,276 | 4,545,276 |
| வங்கி மேலதிகப் பற்று | 20 | 448,909 | 13,049,148 |
| | | **323,941,153** | **327,352,510** |
| **மொத்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்** | | **643,641,454** | **696,792,620** |

05 முதல் 25 வரையிலான பக்கங்களில் வருகின்ற கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான குறிப்புக்கள் இந்த நிதி கூற்றுக்களின் அத்தியாவசிய பகுதியொன்றாகும். இந்த நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிக்கும் பொறுப்பு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் செயலாளருக்கு உரித்தாகும்.

பி.எல்.ஏ.ஜே. தர்மகீர்த்தி
செயலாளர்
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

பீ.எஸ்.எம். சேனாடீர
பிரதம நிதி அலுவலர்
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

## தேயிலை சக்தி நிதியம்

## 2016 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவுற்ற ஆண்டிற்குரிய நிதிப் பாய்ச்சல் கூற்று

| | 2016 | 2015 |
|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் நிதிப் பாய்ச்சல்** | | |
| வரிக்கு முன் இலாபம் / (நட்டம்) | **(30,529,438)** | **(39,232,292)** |
| **பின்வரும் விடயங்களுக்கான சீராக்கங்கள்** | | |
| பெறுமானத் தேய்வு ஒதுக்கங்கள் | 14,356,442 | 31,858,162 |
| அரசாங்க கொடைகள் பெறுகை - மீண்டுவரும் | (150,000,000) | - |
| அரசாங்க கொடைகள் பெறுமானத் தேய்வு | (43,750,503) | (119,300,503) |
| முதிர்ந்த பயிர்மீது பெறுமானத் தேய்வு | 225,483 | 860,510 |
| குத்தகை கூலி பெறுமானத் தேய்வு - வ/ப கலுபோவிட்டியான தேயிலை ஆலை கம்பனி | - | (1,166,736) |
| பணிக்கொடைக்கான ஒதுக்கல்கள் | 32,335,941 | 5,791,088 |
| வட்டி வருமானம் | (588,508) | (394,909) |
| வட்டிச் செலவினம் | 2,343,609 | 20,468,018 |
| **தொழிற்படு மூலதன மாற்றல்களுக்கு முன்னர் தொழிற்பாட்டு இலாபம்/(நட்டம்)** | **(175,606,974)** | **(101,116,662)** |
| **தொழிற்படு மூலதன மாற்றல்கள்** | | |
| பொருள் கையிருப்பு | 65,202,671 | 44,460,337 |
| வியாபார மற்றும் பிற வருமதிகள் | (645,849) | (7,845,510) |
| சட்டவாக்க வருமதிகள் | - | 624,991 |
| வியாபார மற்றும் பிற சென்மதிகள் | 9,188,883 | (5,733,592) |
| சட்டவாக்க சென்மதிகள் | - | 946,074 |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மூலம் கிடைத்த பணம்** | **(101,861,269)** | **(68,664,362)** |
| செலுத்திய பணிக்கொடைகள் | (1,722,551) | (3,700,585) |
| செலுத்திய வட்டித் தொகை | (2,343,609) | (20,468,018) |
| தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் மொத்த நிதிப் பாய்ச்சல் | **(105,927,429)** | **(92,832,965)** |
| முதலீட்டு நடவடிக்கைகளின் மொத்த நிதிப் பாய்ச்சல் | | |
| ஆதனங்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் கொள்வனவு | - | (3,762,769) |
| அருவச் சொத்துக்களின் கொள்வனவு | - | (165,000) |
| முதிரான பயிர்களின் கொள்வனவு | - | (1,590,656) |
| நிலை வைப்புக்களின் முதிர்வு மற்றும் ஏனைய சொத்துக்கள் மூலம் பெற்ற வருமானம் | 14,879,240 | (6,467,261) |
| அரசர்க கொடைகளின் பெறுகை | 150,000,000 | 50,000,000 |
| வ/ப கலுபோவிட்டியான தேயிலை ஆலை கம்பனியின் முற்பண குத்தகை கூலி | - | 50,000,000 |
| பெற்ற வட்டி | 588,508 | 394,909 |
| **முதலீட்டு செயற்பாடுகளில் ஈடுபடுத்திய தேறிய தொகை** | **165,467,748** | **88,409,223** |
| **இநிதி செயற்பாடுகள் மூலமான நிதிப் பாய்ச்சல்** | | |
| அங்கத்தவர்களின் பங்களிப்புக் கட்டணம் | 21,900 | 37,200 |
| பெற்ற நீண்டகாலக் கடன் | - | - |
| கடன் மீளச் செலுத்தல் | (6,008,533) | (12,372,864) |
| **நிதிச் செயற்பாடுகளில் ஈடுபடுத்திய தேறிய தொகை** | **(5,986,633)** | **(12,335,664)** |
| **ஆண்டு காலப் பகுதியில் காசும் காசு சார்ந்தவையும் தேறிய மாற்றல்கள்** | **53,553,686** | **(16,759,406)** |
| வருட ஆரம்பத்தில் காசும் காசு சார்ந்தவையும் | (9,868,056) | 6,891,350 |
| வருட ஆரம்பத்தில் காசும் காசு சார்ந்தவையும் (குறிப்பு 20) | **43,685,630** | **(9,868,056)** |

**05 முதல் 25 வரையிலான பக்கங்களில் வருகின்ற கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான குறிப்புக்கள் இந்த நிதி கூற்றுக்களின் அத்தியாவசிய பகுதியொன்றாகும்**

# தேயிலை சக்தி நிதியம்

2016 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்குரிய உரிமை மாற்றல் கூற்று

| | வழங்கிய மூலதனம் | மீள்மதிப்பீட்டு இருப்பு | நிறுத்தி வைப்பு ஈட்டல்கள் (හරව) | மொத்தம் |
|---|---|---|---|---|
| 2015 திசெம்பர் 31 இல் மீதி | **206,014,150** | **50,249,773** | **(367,912,464)** | **(111,648,541)** |
| ஆண்டிற்குரிய இலாபம் / (நட்டம்) | | | **(30,529,438)** | **(30,529,438)** |
| ஆண்டிற்குரிய சீராக்கங்கள் செய்வதற்கு முன் | | | **(86,625)** | **(86,625)** |
| 2016 திசெம்பர் 31 இல் மீதி | **206,014,150** | **50,249,773** | **(398,528,527)** | **(142,264,604)** |
| | | | | |

05 முதல் 25 வரையிலான பக்கங்களில் வருகின்ற கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான குறிப்புக்கள் இந்த நிதி கூற்றுக்களின் அத்தியாவசிய பகுதியொன்றாகும்

# தேயிலை சக்தி நிதியம் - 2016

### 2016 சம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் பற்றிய குறிப்புக்கள்

### 1. நிறுவனசார் தகவல்கள்

### 1.2 பொது விடயங்கள்

இங்கு இதனகத்துப் பின்னர் ”நிதியம்” என்று அழைக்கப்படுகின்ற தேயிலை சக்தி நிதியம், 2000 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் இலங்கையில் நிறுவப்பட்ட நிதியமாகும். இந்த நிதியத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் 10ஆம் மாடி, 2ஆம் கட்டம், செத்சிரிபாய, பத்தரமுல்ல, எனும் இடத்தில் அமைந்துள்ளது. இந்த நிதியின் முக்கிய நோக்கமாக அமைவது போட்டித் தன்மைமிக்க சந்தையில் தரமான தேயிலையை உற்பத்தி செய்வதன் மூலம் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு நியாயமான விலையில் உள்ளீடுகளை வழங்குவதன் ஊடாக அவர்கள் உற்பத்தி செய்யும் தேயிலை கொழுந்திற்கு நல்ல விலை பெற்றுக் கொடுத்து அவர்களது பொருளாதாரம் மற்றும் சமூக நிலையை உயர்த்துவதாகும்.

### 1.3 பிரதான செயற்பாடுகள் மற்றும் தொழிற்பாடுகளின் தன்மைகள்

தேயிலை சக்தி நிதியத்தின் பிரதான செயற்பாடுகளாக அமைவது தேயிலை மற்றும் உரம் உற்பத்தி செய்தலும் சந்தைப்படுத்தலும் ஆகும்.

### 1.4 தேயிலை சக்தி நிதியத்தை மறுசீரமைத்தல்

2016 ஏப்ரல் மாதமளவில் நிலவரப்படி, தேயிலை சக்தி நிதியத்திற்குச் சொந்தமான பன்னிரெண்டு தேயிலை தொழிற்சாலைகளில் மூன்று மட்டுமே இயங்கி வந்தன. சிறிய தேயிலை தோட்ட உரிமையாளர்களின் தேயிலை தொழுந்துகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை, ஊழியர்களின் சம்பளம், தொழிலாளர் ஊதியம் மற்றும் ஏனைய நாளாந்த செலவுகள் 55.8 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டதுடன், தேயிலை தரகர்களின் முன்பணம்/கடன்கள் என்பன 64 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. பணம் செலுத்தாமையால், தொழிற்சாலைகளுக்கு அவற்றின் கொள்ளளவை விட குறைவான தேயிலை தொழுந்துகள் கிடைக்கப் பெற்றதுடன் அந்த தேயிலை தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட கேயிலையை விற்பனை செய்ததன் மூலம் கிடைக்கப் பெற்ற பணம் முழுவதும் தரகர்கள் மூலம் அறவிடப்பட்டன. 2015.12.31 ஆம் திகதியன்று தேயிலை சக்தி நிதியத்தின் திரண்ட நட்டம் 367.9 மில்லியன் ரூபாவாகும்.

எனவே, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரினால் 2016.04.04, 2016.06.21 மற்றும் 2016.07.21 ஆகிய திகதிகளுடைய அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் மூன்றினை அமைச்சரவையிடம் சமா்ப்பித்து தேயிலை சக்தி நிதியத்தை மறுசீரமைப்பதற்கு அனுமதி கோரப்பட்டதுடன், பின்வருமாறு அங்கீகாரம் வழங்கப்பட்டது.

அ. தேயிலை சக்தி நிதியத்தின் பணிப்பாளர் சபையின் செயற்பாடுகளை உடனடியாக இடைநிறுத்துதல், அந்த அதிகாரங்களை பெருந்தோட்ட அமைச்சின் செயலாளருக்கு வழங்குதல் மற்றும் தேயிலை சக்தி நிதியத்துடன் தொடர்புடையதாக எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் செயலாளர் மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் ஆகியோரினால் முடிவெடுத்தல்.

ஆ. நிறுவனத்திற்குச் சொந்தமான 12 தொழிற்சாலைகளின் முகாமைத்துவத்தினை குத்தகை அடிப்படையில் வெளி தரப்பினரிடம் ஒப்படைத்தல்.

இ. சிறிய தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் நலன் கருதி முன்னெடுத்து வரப்படுகின்ற நலன்புரி காப்பீட்டுக் கருத்திட்டத்தை சிறிய தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகார சபையிடம் ஒப்படைத்தல்.

தொழிற்சாலைகளை குத்தகைக்கு விடுவதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை பங்குதாரர்களுக்கு நன்மைகளை வழங்கவும் மற்றும் நலன்புரி காப்புறுதித் திட்டத்தில் இருந்து தொழிற்சாலைகளின் பணிகளுக்காக செலவிடப்பட்ட 135 மில்லியன் ரூபா தொகையினை மீள்நிரப்பு செய்வதற்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் அதன் பின்னர் மீதமுள்ள வரி வருமானத்தை பொது திறைசேரியில் வரவு வைத்தல்.

உ. தேயிலை சக்தி நிதியத்தினால் நடாத்திச் செல்லப்பட்ட உரத் திட்டம் மற்றும் உள்ளூர் தேயிலை சந்தைப்படுத்தல் திட்டம் என்பவற்றினை மூடிவிடுவதற்க நடவடிக்கை எடுத்தல்.

ஊ. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் உடன்பாட்டின் பேரில், தேயிலை சக்தி நிதியத்தின் தலைமை அலுவலகத்தில் 46 நிரந்தர ஊழியர்கள் அமைச்சின் கீழுள்ள வேறு நிறுவனங்களில் காணப்படும் வெற்றிடங்களுக்கு நியமித்தல் மற்றும் வெற்றிடங்கள் இல்லாத பட்சத்தில், மிகை ஊழியர்கள் அடிப்படையில் அவர்களுக்கு விசேடமாக அமையும் வகையில் அந்த நிறுவனங்களுக்கு இணைப்புச் செய்தல்.

எ. தொழிற்சாலை ஊழியர்களைச் சேர்ந்த 74 பேரின் சேவையை முடிவுறுத்தி தொழில் ஆணையாளர் நாயகத்தின் மற்றும் பிற சம்பந்தப்பட்ட தரப்பினரின் அறிவுறுத்தல்களின்படி இழப்பீட்டுத் திட்டமொன்றினைச் செயற்படுத்துதல், தொழிற்சாலைகளில் பணிபுரியும் 371 தொழிலாளர்களின் சேவையைத் தொடர குத்தகைதாரர்களுடன் இணக்கப்பாட்டிற்கு வருதல் மற்றும் அவ்வாறு இணக்கப்பாட்டினை எட்ட முடியாத பட்சத்தில், அவர்களின் சேவையை முடிவுறுத்தி மேலே குறிப்பிட்டுள்ளவாறு இழப்பீட்டுத் திட்டமொன்றினை செயற்படுத்துதல்.

ஏ. தேயிலை சக்தி நிதியத்தில் நாளாந்த மற்றும் ஒப்பந்த அடிப்பயையில் பணியாற்றுகின்ற ஊழியர்களின் சேவையினை உடனடியாக முடிவுறுத்தல்.

ஐ. தரகர்களிடமிருந்து பெறப்பட்ட கடன்களைத் தீர்ப்பதற்கும், சிறிய தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் தேயிலை கொழுந்துகளுக்கு கொடுப்பனவுகளைச் செய்வதற்கும், பணியாளர்கள்/தொழிலாளர்களுக்குச் செலுத்தப்படாத சம்பளம் மற்றும் ஊதியங்களைச் செலுத்துவதற்கும் மற்றும் குறுகிய காலப் பொறுப்புகளைத் தீர்ப்பதற்கும் பொது திறைசேரியிலிருந்து தேயிலை சக்தி நிதியத்திற்கு ரூ.167.87 மில்லியன் ரூபா தொகையினை ஒதுக்கீடு செய்தல்.

## 1.5 தேயிலை சக்தி நிதியத்தை மறுசீரமைப்புச் செய்தல் தொடர்பான அமைச்சரவைத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்தல்

தேயிலை சக்தி நிதியத்தினை மறுசீரமைப்பதற்கு அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள் அமைச்சரவையின் தீர்மானங்களின்படி பின்வருமாறு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

அ. தேயிலை சக்தி நிதியத்தின் பணிப்பாளர் சபையின் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டு அந்த அதிகாரங்கள் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் செயலாளரிடம் வழங்கப்பட்டுள்ளதுடன், அதற்கமைவாக மறுசீரமைப்புடன் தொடர்புடைய அனைத்துப் பணிகளும் செயலாளரினால் தேவையான சந்தர்ப்பங்களின்போது. நிதி அமைச்சின் செயலாளரின் மற்றும் நிதி அமைச்சுடன் இணைந்த நிறுவனங்களின் ஆலோசனைகள் கேட்டறிந்துநிறைவேற்றப்பட்டுள்ளன.

ஆ. 11 தேயிலை தொழிற்சாலைகளின் நிர்வாகம், மாவரலயில் உள்ள தேயிலை தோட்டம் மற்றும் ஹொரணையில் உள்ள உர களஞ்சிய வளாகம் என்பன அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் ஏனைய தரப்பினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மேற்கூறிய சொத்துக்களின் உரிமை தேயிலை சக்தி நிதியிடம் நிலவும் தன்மையினைக் கருத்திற் கொண்டு, குத்தகை ஒப்பந்தமொன்றின் அடிப்படையில் அல்லது புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றின் கீழ் உரிமையாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் செயலாளருக்கு அதிகாரங்கள் வழங்கப்படுவதற்கு முன்னர், 2016 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலே பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பேரில், ரைகம்கோரலை தேயிலை தொழிற்சாலையை சிறிய தேயிலை தோட்ட அபிவிருத்திச் சங்கமொன்றிற்கு குத்தகை அடிப்படையில் மாற்றப்பட்டுள்ளது.

நலன்புரி காப்பீட்டுத் திட்டம், பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் கீழ் செயற்படும் சிறிய தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், உள்ளூர் தேயிலை சந்தைப்படுத்தல் திட்டம் மூடப்பட்டுள்ளது.

ஈ. தேயிலை சக்தி நிதியத்தின் பின்வரும் பதவியணியின் சேவை முடிவுறுத்தப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| பிரதான அலுவலகத்தின் பதவியணி | 19 |
| தொழிற்சாலை பதவியணி | 67 |
| செக் - ரோல் தொழிலாளர்கள் | 226 |

உ. தேயிலை சக்தி நிதியத்தின் ஊழியர்களில் 09 முகாமைத்துவ உதவியாளர்களும் ஒரு அலுவலக உதவியாளரும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ளனர். நிதியத்தின் பணிகள் 06 முகாமைத்துவ உதவியாளர்கள், ஒரு உதவி தொழிற்சாலை உத்தியோகத்தர் மற்றும் ஒரு அலுவலக உதவியாளர் ஆகியோரால் மேற்கொள்ளப்படுகின்றன.

## 2 விசேட கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம்

### 2.1 கூற்றுக்களைத் தயாரிப்பதன் அடிப்படை

தேயிலை சக்தி நிதியத்தின் நிதி அறிக்கைகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளன. நிதி அறிக்கைகள் வரலாற்றுக் கிரய அடிப்படையின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் நியாயமான மதிப்பின் அடிப்படையில் மறுமதிப்பீடு செய்யப்படுகின்றன. இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதி அறிக்கைகளை தயாரிப்பதற்குத் தேவையான கணக்குகளின் பயன்பாடு தேவைப்படுகிறது. கணக்கீட்டுக் கொள்கைகளைப் பயன்படுத்துவதற்கான செயல்முறையைத் தீர்மானிக்க நிர்வாகம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். உயர்மட்ட தலையீடு அல்லது உந்துதல் தேவைப்படும் பிரிவுகள் அல்லது நிதிக் கூற்றுக்களுக்கு முக்கியமான மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் தேவைப்படும் பிரிவுகள் பற்றி குறிப்பு இலக்கம். 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

### 2.2 கணக்கீட்டுக் கொள்கைகளின் மாற்றங்கள்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றங்கள் சுருக்கிய நிதிக் கூற்றுக்களில் உள்ள காலகட்டங்கள் தொடர்பாக தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டுள்ளதுடன், வேறு விதத்தில் கூறப்படாத விடத்து, இலங்கை நிதி அறிக்கையிடல் தரநிலைகளுக்கு மாறிய தேதியில் நிதி நிலையானது ஆரம்ப இலங்கை நிதி அறிக்கையிடல் தரநிலைகளுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளன.

### 2.3 செயற்பாட்டு மற்றும் வழங்கல் பயன்பாட்டு நாணயம்

நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிலுவைகள் அளவிடப்படுவது, நிறுவனம் செயற்படும் முதன்மை பொருளாதார சூழலின் புழக்கத்திலுள்ள நாணயத்தைப் பயன்படுத்தி ஆகும். நிதியினை விளக்கும் புழக்கத்திலுள்ள நாணயமான இலங்கை ரூபாயில் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

### 2.4 சொத்துக்கள் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்

சொத்துக்கள் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் என்பவற்றினை அதன் தற்போதைய இருப்பிடத்திற்கு கொண்டு வருவதற்கு நேரடியாக பங்களிப்புச் செலுத்திய யாதேனுமொரு செலவினமும் மற்றும் நிர்வாகத்தின் நோக்கத்தின்படி செயற்படும் திறன் தொடர்பான நிபந்தனைகள் உட்பட செலவினத்தின் பெறுமதிக்கேற்ப ஆரம்பத்தில் இனங்காணப்பட்டுள்ளது.

சொத்துக்கள் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் என்பவற்றினை 2015 திசெம்பர் ஆம் திகதிக்கு முன்னர் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்ட நிதி நிலை அறிக்கையில் என்பவற்றின் மீள்மதிப்பீட்டு மதிப்பில் காட்டப்பட்டுள்ளன. சொத்துக்கள் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட மதிப்பை, மறுமதிப்பீட்டுத் தேதியிலுள்ள நியாயமான மதிப்புடன் ஒப்பிடக்கூடிய ஒரு கருத்தியல் செலவாகக் கருத நிதியம் முடிவு செய்துள்ளது. சொத்துக்கள் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் என்பவற்றினை கருத்தியல் செலவாகக் கருதுவதன் மூலம் பிற்காலத்தில் செலவற்ற திரண்ட பெறுமானத் தேய்வு மற்றும் திரண்டஇழப்பீட்டு நட்டங்கள் என்பன கணிப்பிடப்படுகின்றன.

பிற்கால செலவின சொத்தின் சுமந்து செல்லும் பெறுமதியில் சேர்த்து அல்லது சொத்தாக அங்கீகரிக்கப்படும். அதன்படி, ஒரு பொருளுடன் தொடர்புடைய எதிர்கால பொருளாதார நன்மைகளின் விடயத்தில் மட்டுமே அவை நிதியத்தில் சேர்க்கப்படும், அதன்படி ஒரு பொருளின் விலையை நம்பகத்தன்மையுடன் கணப்பிட முடியும். ஏனைய அனைத்து பழுதுபார்ப்புக்கள் மற்றும் பராமரிப்புக்கள் அவை மேற்கொள்ளப்பட்ட் நிதிக் காலத்தில் விரிவான வருமான அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன.

காணிக்கு பெறுமானத் தேய்வு செய்யப்படாவிட்டாலும், ஏனைய சொத்துகளின் தேய்மானம் தேய்மானத்தின் அண்மித்த பெறுமதிக்கு மதிப்பிடுவதற்கு பதிவளிக்கப்பட்ட மதிப்பு முறையைப் பயன்படுத்தி கணக்கிடப்படுகிறது. ஒரு சொத்தின் செலவு அல்லது மீள்மதிப்பீட்டுத் தொகையினை ஒதுக்க, அதன் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுற்காலம் பின்வருமாறு அமைகின்றது.

| **சொத்துத் தொகுதி** | **மீள்மதிப்பீட்டுத் திகதிக்கு உத்தேச பயனுள்ள ஆயுட்காலம்** |
|---|---|
| கட்டிடம் | 40 ஆண்டுகள் |
| பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள் | 13 ஆண்டுகள் |
| தளபாடமும் பொறித்திகளும் | 10 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனங்கள் | 10 ஆண்டுகள் |
| கணினிகள் | 10 ஆண்டுகள் |
| உபகரணங்கள் மற்றும் கருவிகள் | 10 ஆண்டுகள் |
| தொலைபேசிகள் | 10 ஆண்டுகள் |
| முதிர்ந்த பயிர்செய்கை - தேயிலை | 33 ஆண்டுகள் |

சொத்து ஒன்றின் சுமந்து செல்லும் பெறுமதியானது அதன் எதிர்பார்க்கப்படும் மீட்டெடுக்கக்கூடிய தொகையை விட அதிகமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் அதனை அறவிடக் கூடிய தொகையாக உடனடியாக எழுதப்படும்.

### 2.5 அருவச் சொத்துக்கள்

